# கொழும்பு- யாழ். பஸ் மீது நொச்சிகாமத்தில் சூடு ஜீப்பில் வந்தோர் சுட்டதில் இளம்பெண் பலி

நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த தனியார் பஸ் வண்டியொன்றின் மீது நொச்சியாகமயில் வைத்து இனம் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம் பெண்மணி ஒருவர் மரணமடைந்தார், மற்றொருவர் படுகாயமடைந்தார், மரணமடைந்தவர் சாவகச்சேரி தபால்நிலைய வீதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது. காயமடைந்தவர் இவரது மைத்துனர் எனவும் இவர் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அறியப்படுகின்றது. நேற்று முன்தினமிரவு கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்த பஸ் வண்டி நொச்சியாகமயை அண்டிய சமயம் ஜீப்வண்டியொன்று பஸ் வண்டியை முந்திச் சென்றதாகவும், அந்த ஜீப்பிலிருந்தே பஸ் வண்டியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சடலம் நொச்சியாகம வைத்தியசாலையில் உள்ளது.


பக்கங்கள் ஆறு — விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 21 — ஞாயிறு 25-02-1990 (மாசி 13) றஜபு 28


கருணாநிதி தமிழ்க்குழுக்கள்

# பேச்சுகள் தாமதமானாலும்

# திட்டமிட்டபடி படைவிலகல் நடக்கும்

## இந்திய அரசு நேற்று அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியப்படையினர் இலங்கையிலிருந்து முற்றாக வாபஸ் பெறுவது திட்டமிட்டபடி நடக்கும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. தற்போது சென்னையில் நடைபெற்றுவரும் இயக்கங்கள் - கருணாநிதி பேச்சுவார்த்தைகள் படை வாபஸிற்கு எவ்விதத்திலும் இடைஞ்சலாக இருக்காது என்றும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

பேச்சுகளில் சுமுகநிலை தோன்ற காலதாமதம் ஏற்பட்டாலும், படை வாபஸ் காலதாமதமின்றி திட்டமிட்டபடி மார்ச் மாத இறுதிக்குள் நடைபெறும் என்றும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

## புலிகளின் வானொலி, நிதர்சனம் மீண்டும் ஆரம்பமாகும் - டொமினிக்

விடுதலைப்புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சி ஒளிபரப்பும், வானொலி ஒலிபரப்பும் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ் மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஒளி, ஒலிபரப்புச் சேவைகள் முன்னர் நடைபெற்றுவந்த போதிலும் இந்திய இராணுவத்துடனான மோதலையடுத்து 1987 இல் இவை நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

இம்முறை விடுதலைப்புலிகளின் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கிழக்கு மாகாணத்திற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

## க.பொ.த உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 10-ல் ஆரம்பம்

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவிருந்த ஜி சி. ஈ. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி ஜூலை 28-ம் திகதி நடைபெறவிருந்த இப்பரீட்சை ஆகஸ்ட் 10-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பாராளுமன்ற வளவில் ஒரே இலக்க இரு வாகனங்கள்

இலங்கைப் பாராளுமன்ற வளவினுள்ளே ஒரே இலக்கமுள்ள இருவாகனங்கள் நின்றிருந்ததாக சுதந்திரக்கட்சி எம். பி மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார் பாராளுமன்ற கூட்டம் ஒன்றில் இவர் குற்றம் சாட்டியபோது இந்த ஒரே இலக்க வாகனங்கள நின்றது எமது பாராளுமன்றத்திற்கு வெட்கம் வெட்கம் என்று எதிர்த்தரப்பு எம். பிமார் பலர் கூரலெழுப்பினர்.

## ஜனாதிபதி, அமைச்சர் ரஞ்சன் பதவி விலகவேண்டும் - வரதர்

இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் தவறிவிட்டது. எனவே இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸவும் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவும் பதவி விலகவேண்டும் என வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார்.

வடகிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு தவறிவிடடது என ரஞ்சன் விஜேரட்ன கூறியது குறித்து கருத்து தெரிவித்த வரதராஜப்பெருமாள் மத்திய அரசு வடகிழக்கு மாகாண பொலிஸாருக்கு அதிகாரம் வழங்காததினாலேயே இந்நிலை ஏற்பட்டது எனக் கூறினர்.

—6 ஆம் பக்கம் பார்க்க

### வட-கிழக்கு போக்குவரத்துச் சபை விடயம்

## வட-கிழக்கு மாகாண சபைக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு

வடக்கு கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைகளின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வடகிழக்கு மாகாண சபை பொறுப்பு ஏற்க கொண்டுவரப்பட்ட மாகாண சபையின் சட்ட மூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

—6 ஆம் பக்கம் பார்க்க


உள்ளே

நேரடி றிப்போர்ட் கொழும்பு ரவுண்டப்

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர் பெயர் விபரம் நேற்றைய தொடர்ச்சி.


## பால்மா விலை குறையும்

பால் மா விலை உலகச்சந்தையில் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதால் நாட்டிலும் பால் மாவின் விலையை குறைப்பதற்கு வர்த்தகக் கப்பல்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நடவடிக்கை எடுத்துள்ளார்

இது தொடர்பாக அவர் அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# பருத்தித்துறையில் நேற்று இந்திய ஹெலி சூடு!

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை இந்திய அமைதிப்படையினரின் ஹெலிகப்டர் ஒன்று சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது இதனால் அப்பகுதிகளில் பலமணிநேரம் பதற்ற நிலைகாணப்பட்டது.

காங்கேசன்துறை [வழியாக வந்த ஹெலிக்கப்டர் தொண்டமானாறு, உடுப்பிட்டி பகுதியின் திடீரென துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. மக்கள் பாதுகாப்பு இடங்களை நோக்கி ஓடி ஒளித்துக் கொண்டனர்.

—6 ஆம் பக்கம் பார்க்க

## வல்வை கூட்டத்தில் நெடுமாறன்

(உடுப்பிட்டி)

தமிழ்நாடு தமிழ்த்தேசிய இயக்கத் தலைவர் திரு. நெடுமாறன், திராவிடக் கழக அமைப்பாளர் திரு. இராமகிருஷ்ணன் இருவரும் நேற்று வல்வைச்சந்தியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றினர்.

புலிகளின் முன்னாள் தமிழ்நாடு அரசியற் தலைமைப் பொறுப்பாளர் திரு பி. மகேந்திரன் (நடேஸ்) வல்வை பிரசைகள்குழு தலைவர் எஸ்.செல்வேந்திரா பிரஜைகள் குழு செயலாளர் எஸ். மகேசன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். திரு.

—6 ஆம் பக்கம் பார்க்க

ஒன்றுமில்லை அது:
பொதி போட்ட பழக்கம்!
வரும் போது
உணவுப் பொதி!
போகும் போது
குண்டுப் பொதி!

## போதை வஸ்து கடத்திய யாழ். வாசிக்குத் தண்டனை

இந்தியாவிலிருந்து போதை வஸ்து கடத்தி வந்த யாழ்ப்பாண வாசியான சதாசிவம் சிவானந்தமூர்த்தி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தைக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனை விதித்துள்ளார்.

1987இல் இவர் திருவானந்த புரத்தில் இருந்து விமான மூலம் ஹிரோயின் கடத்தி வந்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

# கொழும்பு சாரணர் ஜம்போறியில்

# 31 யாழ். சாரணர் பங்குபற்றினர்

இம்மாதம் 14-ம் திகதி முதல் 20-ந் திகதி வரை இலங்கைச் சாரணர் சங்கத்தின் 'ஆதரவில் கொழும்பு விகார மகா தேவி பூங்காவில் நடைபெற்ற 'சார்க்' ஜம்போறியில் பங்குபற்றிய யாழ். மாவட்டச் சாரணர் குழு யாழ்ப்பாணம் திரும்பியுள்ளது.

ஜம்போறியில் 'சார்க்' நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு போன்றவற்றைச்சேர்ந்த சாரணர்களும் சாரணிகளும், உலகின் ஏனைய நாடுகளைச் சேர்ந்த சாரணப் பிரதிநிதிகளும் தங்கள் கண்டங்களின் தலைவர்களின் தலைமையில் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தனர்.

யாழ் மாவட்டச் சாரணர் குழு யாழ். மாவட்டக் கண்டத் தலைவரும் யாழ். மாவட்டச் சாரண உதவி ஆணையாளரும், வவுனியா நகராட்சி மன்ற நிர்வாக உத்தியோகத்தரும் வவுனியாத் தமிழ்ப்பிரதேசச்சபையின் விசேட ஆணையாளருமான டோறஸ் வி. மூ. இராசலிங்கம் தலைமையில் முதலாவது 'சார்க்' ஜம்போறியில் பங்குபற்றியது. இவருக்கு உதவியாகச் சமூக சேவைக்குப் பொறுப்பான சு. ஏகாம்பரநாதன் வேலணைச் சைவப்பிரகாச வித்தியாலயச் சாரண ஆசிரியர் க. குகனேஸ்வரன் இவர்களுக்குத் துணையாக ந. நல்லையா ஆகியோரும் பங்கு பற்றினர்.

இக்குழுவில் யாழ். பரியோவான் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை, கரம்பன் சண்முகநாத வித்தியசாலை, யாழ். கனகரெட்ணம் மத்திய வித்தியாலயம் போன்ற சாரணக் குழுக்களைச் சேர்ந்த 31 சாரணர்களும், இச்சாரணர்களின் குழுத் தலைவனாக செல்வன் க. ஏகாம்பரநாதனும், உதவிச் சாரணத் தலைவனாக செல்வன் க. கிருஷ்ணகுமாரும் பங்குபற்றினர். இவர்களுக்குத் துணையாக யாழ். பட்டினத் திரி சாரணத் தலைவன் தில்லைவாசனும் வேறு சிலரும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினர்.

குருளையர் தினத்தையொட்டிய நிகழ்ச்சிகளில் குருளையருக்குப் பொறுப்பான திருமதி மா. கணபதிப்பிள்ளை தலைமையில் ஏனைய குழுத் தலைவர்களின் உதவியுடனும் யாழ். மாவட்டக் குருளையர் குழுக்கள் ஜம்போறியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உழவு இயந்திரம் வழங்கப்பட்டது

(காவலூர்)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கென சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான உழவு இயந்திரமொன்றை புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது. இதனை மேற்படி சங்கத் தலைவர் திரு. பொ. நடராசா பொதுமுகாமையாளர் திரு. வே. செல்லத்துரை ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# வல்வெட்டித்துறையில் கலை, கலாசார வைபவம்

(வடமராட்சி)

''வல்வைப் பிரஜைகள் குழு மரணங்களைக் கண்டு அஞ்சாது மக்களுக்காகச் சேவை செய்த மகத்தான சக்தி! இச்சக்தி இராணுவத்தின் கொடுமைகளை உலகறியச் செய்ததோடு பல வெகுசனப் போராட்டங்களை முன்னின்று நடாத்திய பெருமைக்குமுரியது. இவர்களின் இப்பணியைத் தமிழீழ மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் தீபன் வல்வைப் பிரஜைகள் குழுவால் நடாத்தப்பட்ட கலை கலாசார வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு வல்வைப் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. செல்வேந்திரா தலைமை வகித்தார். திரு தீபன் தொடர்ந்து பேசுகையில்.

"எமது கலை கலாசாரங்கள் கடந்த காலங்களில் பேரினவாதச்சக்திகளால்ஆங்காங்கே அழிக்கப்பட்டன. ஆனால் அருகவில்லை இன்றும் சிற் சில இடங்களில் எமது பழந்தமிழ்க் கலைவடிவங்கள் வளர்ச்சியடைந்து கொண்டு வருவது மனதுக்கு மன நிறைவுதரும் விடயமாகும். நாம் ஒரு தேசிய இனம் எனவே எமது கலை கலாசாரங்களைப் பேணிக் காக்கவேண்டும் என்றார்.

இவ்வைபவத்தில் இ, நடன சிகாமணி திரு. எஸ். அனந்தராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தமிழர்களின் பழந்தமிழ்க் கலைவடிவங்களை ஞாபகப்படுத்தும் பலகலை நிகழ்ச்சிகளும், போராட்டச் சிந்தனையைத் தோற்றுவிக்கும் பல கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியைக் கண்டு களித்தார்கள்

# இலங்கையில் மனித உரிமை மீறல் அதிகரிப்புஎனக் குற்றச்சாட்டு

மனித உரிமை மீறல்கள் இலங்கையில் கடந்த வருடம் மிகவும் அதிகரித்துள்ளதாக லண்டனில் உள்ள சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் படையினரால் சட்டத்துக்கு மாறான முறையில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் டயர்களின் மீதும், கிடங்குகளிலும் எரிக்கப்பட்டுள்ளனர். பலர் ஆறுகளில் தூக்கி வீசப்பட்டுள்ளனர் ஆயிரக்கணக்கானோரைக் காணவில்லை. இதே போலவடக்குக்கிழக்குப் பகுதிகளிலும் இந்தியப்படையினரால் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என்ற பேரில் பலர் சித்திரவதை செய்யப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர். இந்தியப்படையினரால் சுமார் ஐயாயிரத்து நானூற்று எண்பத்தொன்பது போர் கைதாகியுள்ளனர். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி கோரிக்கை

இளைஞர்கள் சுதந்திரமாக சரணடைய வேண்டும் என்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய சரணடைபவர்களின் நலன்களை கவனிக்க பொருத்தமான பிரதிநிதிகளை தெரிவு செய்யப்படவுள்ளனர். இப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுமாறு ஜனாதிபதி சகல கட்சித்தலைவர்களையும் கேட்டுள்ளார்.

# தமிழ்ப்பண்பாட்டு இலங்கைக் கிளையின் புதிய நிர்வாகிகள்

(வேலணை)

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் புதியஆண்டுக்கான நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. பொன். பூலோகசிங்கம், உபதலைவர். வே. கெ. தனபாலன், இணைச் செயலாளராகத் திரு. சி. சி. வரதராசா, திரு. எஸ். பரமநாதன், தனாதிகாரியாகத் திரு. இ தவகோபால், பிரசாரப் பொறுப்பாளராக டாக்டர் இ. சற்குருநாதன், பத்திரிகை ஆசிரியராகத் திரு. ஆ.சண்முகலிங்கம்,மற்றும் 8 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு காலை ஆங்கிலவகுப்புக்கள் நடாத்தப் படுகின்றன. தனிப்பட்ட முறையிலும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப்படும் S ஜெயராஜா, கல்யாணி ஆங்கிலக் கல்விநிலையம், 204 மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 02249

### விற்பனைக்கு

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தில் சர்வோதயம் பின்பக்கம் (கல்யாணத்தோட்டம்) 10 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். திருமதி. நாகம்மா நாகநாதி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு 2. 02252

## கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி
## பதவி வெற்றிடங்கள்

வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை எதிர்வரும் 14-03-1990-ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, இளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பதவிகள்: காவலாளி (பதில்)
சுகாதாரத் தொழிலாளி (பதில்)
மின் தொழிலாளி (பதில்)

தகைமைகள்: (1) எட்டாம் வகுப்புச் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.
(2) வயது 18—40 உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(3) நல்ல தேகாரோக்கியம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
(4) கரைச்சிப் பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

சு. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்,

கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.
20-02-1990

02255

## கனடாவில்
## வேலைவாய்ப்புக்கள்

| | VACANCIES | | SALARY | |
|---|---|---|---|---|
| 1. | கணக்காளர்கள் | Accountants | 1170 | CD |
| 2. | கணக்குப்பதிவாளர்கள் | Book-Keepers | 900 | CD |
| 3. | இரசாயனவியலாளர்கள் | Chemists | 960 | CD |
| 4. | எழுதுவினைஞர்கள் | Clerks | 840 | CD |
| 5. | சாரதிகள் | Drivers | 850 | CD |
| 6. | பொறியியலாளர்கள் | Engineers | 1340 | CD |
| 7. | எலெக்ரீஷியன்கள் | Electricians | 1110 | CD |
| 8. | போர்மன்கள் | Foremen | 1020 | CD |
| 9. | தொழிலாளர்கள் | Labourers | 750 | CD |
| 10. | மெக்கானிக்குகள் | Machinists | 800 | CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்களுக்கும் ஏனைய விபரங்களுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 28 . 2 , 1990

AXONT AGENCY
370, Point Pedro Road
Anaipanthi
Jaffna.
[வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்]

02250

## L M L VESPA
(MADE IN INDIA)

★ மூன்று வித்தியாசமான மொடல்கள்
★ தானே இயங்கக் கூடியது (SELF START)
★ நான்கு புதிய வர்ணங்களில்

விற்பனையாகிக்கொண்டிருக்கிறது

எம்மிடம் ஸ்கூட்டர் வாங்கியவர்களுக்கு ஒரு இலவச சேர்விஸ் செய்து கொடுக்கப்படும்.

V. K. இராசரத்தினம்
L M L யாழ். மாவட்ட விற்பனையாளர்,
95, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.
02242

# இதயநாதம்

ஞாயிற்றுக்கிழமை 25 — 02 — 1990

### நல்வாக்கு

காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்வது போலாகும்.

-ஜேம்ஸ் ஆலன்

ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

## ஆடு நனையுதென்று....

ஆசியாவில் அரசியற் படுகொலைகளின் வரலாறு கம்பூச்சியப் படுகொலைகளுடன் முற்றுப் பெறவில்லை. தொடர்ந்தும் ஆசிய நாடுகளில் அரசியற் படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் காங்கிரஸுக்குச் சமர்ப்பித்துள்ள மனித உரிமைகள் தொடர்பான வருடாந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வரும் அரசியல் வன்முறைகள், அடக்கு முறைகள், சித்திரவதை, படுகொலை தொடர்பாக இந்த அறிக்கை விபரங்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு கூடுதல் ஜனநாயகம் கோரிச் சீன மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர். இதனை ஒடுக்கச் சீன அரசு வன்முறையைக் கையாண்டது விளைவு தியனமென் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களின் சடலங்கள் மட்டும் எஞ்சியது.

சோவியத் மாற்றங்களைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பாவில் ஆட்சி மாற்றங்கள் ஆரம்பமாகின. அரசுக்கெதிராக வன்முறைகளும், கிளர்ச்சிகளும் எழுந்தன.

அந்தக் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களினடியாக ருமேனியப்புரட்சி எழுந்தது. அதே வேளையில் பர்மாவுக்குள் அமெரிக்கா படைகளை அனுப்பியது ஆக்கிரமிப்பிற்காக.

சோவியத் யூனியனுக்குள் தேசிய இனச் சிக்கல்கள் எழுந்தன அவற்றைத் தணிக்க சோவியத் அரசு ஆர்மேனியாவிற்குள்ளும், அஸர்பையானுக்குள்ளும் டாங்கிகளையும், பீரங்கிகளையும அனுப்பி ஆயிரக் கணக்கான மனித உயிர்களைப் பலி கொண்டது.

கம்போடியாவில் படுகொலைகள் முற்றுப் பெறவில்லை. கமரூஷ் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தம்மை எதிர்ப்போரையும், வியட்நாம் வீரரையும் படுகொலை செய்து வருகின்றனர் கமரூஷ் கெரில்லாக்கள்.

வியட்நாமிலும், பர்மாவிலும் மிக மோசமாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இந் நாடுகளில் கைதிகள் மோசமாக நடத்தப்படுவதோடு, தப்பியோடுவோர் சுட்டும் கொல்லப்படுகின்றனர்.

பர்மாவில் ஆயிரம் கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். வடகொரியாவில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவை எல்லாவற்றையும் விட இலங்கை பற்றியும் அது பல விடயங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறது.

கடந்த வருடம் இலங்கையில் எண்ணாயிரத்து ஐம்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஐயாயிரத்து அறுநூறு பேர் பொது மக்கள்.

இலங்கை சுதந்திரமடைந்து நாற்பத்திரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டது. இந்த நாற்பத்திரண்டு ஆண்டு காலப் பகுதியில் கடந்த வருடத்திலேயே இலங்கையில் ஆகக் கூடுதலான கொலைகள் இடம் பெற்றுள்ளன.

இக்கொலைகள் இந்திய இராணுவத்தாலும், இலங்கை இராணுவத்தாலும், தீவிரவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறெல்லாம் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆழ்ந்த கவலையும், அதிருப்தியும் தெரிவிக்கும் அமெரிக்காவே நிக்கரகுவாவிற்கு எதிராகக் கொண்டிரஸ் கிளர்ச்சியாளர்களுக்கும், ஆப்கானுக்கு எதிராக ஆப்கான் கெரில்லாக்களுக்கும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கும் நிதி முதல் அனைத்து உதவிகளையும் வழங்கியது அப்பட்டமான உண்மை.

அப்படியானுல் மனித உரிமை மீறல் பற்றி அமெரிக்கா பேசுவது ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதை தானு?

## விசா பெற வகுப்பு

வெளிநாடு செல்வதற்காக அதாவது விசா பெறுவதற்காக நேர்முகப் பரீட்சைக்காக வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மூன்றுமாத நேர்முகப் பரீட்சை வகுப்புக்களை இத்துறையில் புகழ்பெற்ற ஏஜென்சிகள் நடத்துகின்றன.

கேள்விகள் எவை? விடையை எப்படிச் சொல்வது. இதுபற்றியதே அந்த வகுப்பு.

ஆங்கிலம் தெரியாதவர்களுக்குப் பயிற்றுவிக்க ஆயிரம் ரூபாவில் இருந்து இரண்டாயிரம் ரூபாவரை கட்டணம் அறவிடப்படுகிறது.

இந்தியன் ஆமி பேசுவதுபோல ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களுக்கு 750/- ரூபா.

ஓரளவு பேசத் தெரிந்தவர்களுக்கு 500/-

## கொழும்பு ரவுண்ட் அப்

வெளிநாடுகளில் வசிக்கின்ற எம்நாட்டு வாலிபர்களுக்குப் பெண்களை (மணமகள்) அனுப்புவது இப்போது நாகரிகமாகி விட்டது. பெண்ணிற்கு மாப்பிள்ளையைப் பற்றி எதுவுமே தெரியாது. விமானம் ஏறுவதற்காகக் கொழும்புக்கு வருகின்றூர். கற்பனையில் கணவன் எப்படி இருப்பான் என நினைத்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

கொழும்பில் நான்காம் குறுக்குத் தெருவில் இரண்டு வயோதிபர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர் .. இவர்கள் இருவரும் தூய யாழ்ப்பாணத் தமிழைப் பேசிக்கொண்டு நடந்தனர், நானும் அவர்களுக்குப் பின்னுல் மெல்ல நடந்தேன்.

...என்ர மகனுக்குப் பொம்பிளை அனுப்புறத்துக்கு வந்தனுன்... சாவகச்சேரியில பொம்பிளை... பிள்ளை யாழ்ப்பாணக் கம்பசில படிச்சவள்... நல்ல குணமான பிள்ளை... என்ர பிள்ளை இடையில படிப்பக் குழப்பிப்போட்டான். அவன் இஞ்ச இருந்திருந்தா... படிச்சிருப்பான்... இப்ப யார் படிப்பபற்றிகவலைப்படுகினம்

...டணம் இருந்தாச் சரி... என்ர பிள்ளை கனடாவில, உழைக்கிற உழைப்ப... இஞ்ச ஒரு இஞ்சினியராலும் உழைக்க மூடியாது அவன் ஒரு மாசம் எடுக்கிற சம்பளம்இஞ்ச ஒரு வருசம் கஷ்டப்பட்டு உழைச்சாலும் கிடைக்காது...

இவர்களின் இந்த உரையாடலைக் கேட்ட போது எனக்கு ஏற்பட்ட சம்பவம் மனக்கண்முன் நிழலாடியது.

யாழ்ப்பாணததில் இருந்து கொழும்புக்குப்பயணம் செய்து கொண்டிருந்தேன். ஒரு வயது முதிர்ந்த அம்மாளும் அவருடைய பிள்ளைகளும் எனக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர்.

புகையிரதம் சிறிது தூரம் சென்றதும் அந்த அம்மாள் என்னுடன் உரையாடலானூர். தம்பியும் வெளிநாடு போகலாமே... இப்ப யார் தம்பி இஞ்ச இருக்கிற ஆக்களுக்கு மதிப்பு குடுக்கினம்... வெளிநாடு போட்டு வந்தா எல்லாரும் தேடி வருவினம் தம்பி... ...என்ர பிள்ளையள் இரண்டு வெளிநாட்டில இருக்கிதுகள் அவங்கள் உழைச்சுக் கொட்டுறுங்கள்... எனக்கு என்ன கவலை... என்றூர் பெருமிதத்துடன்...

''நான் சற்றுப் பின்நோக்கி எமது சமுதாயத்தைப் பார்க்கிறேன்... 'அவன் பியோனுக இருந்தாலும் பரவாயில்ல... அரசாங்க உத்தியோகத்தில' இருந்தாச் சரி... அவனுக்குத்தான் என்ர பிள்ளையக் குடுப்பன்... என்று சொன்ன காலம் இருந்தது... இப்போது மலை ஏறி விட்டது.

யாழ்ப்பாணம் படிப்புக்குப் புகழ் பெற்றது. இந்த நிலை மாறக் கூடாது. பணம் வரும் போகும்... அறிவு உள்ள சமுதாயத்தைப் பணத்தின் மூலம் வாங்கி விட முடியாது. என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெண்கள் படிப்பில் கூடிய கவனம் செலுத்திப் பல்கலைக் கழகம் வரை சென்று விடுகின்றூர்கள். ஆனுல் ஆண்கள் படிப்பை இடையில் விட்டு விடுகிறுர்கள். பட்டதாரிப்

# கொழும்பில் தங்கியிருக்கும்... (பகுதி 2)

# வடபகுதிப் பெண்களின் அவலநிலை

### உதரன்

பெண்களுக்குச் சமமான மாப்பிள்ளையை இப்போது தேடி எடுக்க முடியாத நிலையே இன்று தமிழ்ப்பகுதிகளில் காணப்படுகின்றது.

எம் மனே நிலை மாற வேண்டும் படிப்பில் ஆர்வம் காட்ட வேண்டும்.

சில நாட்களுக்கு முன் கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து ஒரு இளம் பெண் கண்ணீர் மல்க தாய் தந்தையருடன் சண்டை பிடித்துக் கொண்டார் என்ன என்று அறிய முயன்றேன்.

அப்பெண்ணிற்கு வெளிநாடு சென்று மணமுடிக்க விருப்பமில்லை...நான் யாழ்ப்பாணம் போகப் போகிறேன் என்று பிடிவாதமாக நின்றுள்... தாய் தந்தையர் எவ்வளவோ சொல்லியும்...கேட்காமல் அவள் பயணத்தை யாழ் நோக்கி ஆரம்பித்தாள்

பாருங்கள் வெளிநாட்டு மோகத்தால் எத்தனை பிரச்சனைகள் எத்தனை சீரழிவுகள் ...சிந்தித்துப் பாருங்கள்......

இப்போது இந்தச் சந்தர்ப்பத்தை ஏஜென்சிகள் நன்கு பயன்படுத்தி வருமானத்தைத் தேடிக் கொள்கின்றன. ஒரு ஏஜென்சியிடம் வெளிநாடு போகக்டணம் கொடுத்தால். ஆறு அல்லது ஒன்பது மாதங்கள் வரை ஏமாற்றுவதைக் காண்கிறேம் இதன் மர்மம் என்ன?

இந்தப் பணத்தை வைத்து ஒன்பது மாதங்களில் அவர்கள் பல லட்சங்களை உழைத்து விடுகிறுர்கள். மேலும் சிலர் வெளிநாடு செல்லப் பணத்தைக் கொடுக்கின்றபோது முதலில் காசு கட்டியவர்களை அனுப்புகின்றூர்கள். இப்படியே இவர்களது ஏமாற்று வேலை தொடர்கின்றது.

பாஸ்போட், அடையாள அட்டை, றைவிங் லைசென்ஸ், இப்படிப் பல வேலைகளைச் செய்து கொடுக்க பணத்தை கறந்து கொண்டுதான் இருக்கின்றூர்கள்.

நேர்மையான முறையில் பாஸ்போட் பெற விண்ணப்பித்தவர்கள் பாஸ்போட்டைப் பெறமுடியாமல் தவிக்கிறுர்கள் குறுக்குவழியில் விண்ணப்பத்தைக் கொடுத்தவர்கள் -மன்னிக்கவும் விபரங்களைக் கொடுத்தவர்கள் தேவையான பத்திரங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் பணத்தைக் கொடுத்து பாஸ்போட்

### நேரடி ரிப்போட்

பெற்றுக்கொள்ளுகின்றூர்கள்:

தீடீர் தீடீர் எனப் பொலிசார் ஏஜென்சிகளை சோதனைச் யிட்ட போதும் களவாக பாஸ்போட் செய்பவர்களை தடுத்து நிறுத்தி விட முடியவில்லை·

திட்டம் போட்டுப் பாஸ்போட் செய்யும் கூட்டம் செய்துகொண்டுதான் இருக்குது. சட்டம் போட்டுத்தடுக்கும்கூட்டம் தடுத்துக்கொண்டுதான் இருக்கிறது ஆனுல் எவராலும் தடுத்து நிறுத்தி விடமுடியவில்லை.

தலைநகரில் எங்கு எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் லஞ்சம் கொடுக்கவேண்டிய நிலையே காணப்படுகின்றது. செய்ய முடியாத எந்தக்காரியத்தையும் செய்து முடித்து விடலாம் எப்படி? லஞ்சம் கொடுத்தால்...

வெளிநாட்டுத் தூதரகங்களில் விசா பெறுவதற்குக்கூட வெளிநாட்டு அதிகாரிகள் சிலருக்கும் லஞ்சம் கொடுக்கப் படுகிறதாம்.

நேர்முகப் பரீட்சைக்காக வெளிநாட்டுத் தூதரகத்திற்குச்செல்பவர்கள் அப்பரீட்சையில் சித்தியடையவும் லஞ்சம் கொடுக்கவேண்டித்தான் இருக்கிறது

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத்தூதரத்தில் கடமையாற்றும் ஒருவரைக் ஹோட்டல் ஒன்றிற்கு அழைத்து விருந்து வைத்தால் சில காரியங்களை அதாவது சில தடைகளைச் சுலபமாகக் கடந்துவிட முடிகிறதாம்.

இது இப்படி இருக்க இப்போது ஹோட்டல்களில் தங்கி இருக்கும் வாலிபர்களின் தொகை வெகுவாகக் குறைந்துள்ளது. இவர்களை நப்பி கொச்சிக்கடை, ஆமர் வீதி போன்ற இடங்களில் புதிதாகத்திறக்கப்பட்ட சாப்பாட்டுக்கடைகளுக்கு வியாபாரம் குறைந்துள்ளது. சில கடைகளை மூடவேண்டிய நிலை கூட ஏற்பட்டுள்ளது.

காலிமுகத்திடல் இப்போது தமிழ் இளைஞர்கள் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கிறது.

வெள்ளவத்தை பம்பலப்பிட்டிப்பகுதிகளில் கூட்டமாக நின்று அரட்டை அடிப்பவர்களைக்காண முடியவில்லை.

ஆங்கிலத்திரைப்படங்களைக் காண்பிக்கும் திரையரங்குகள் சில மாதங்களாக

— 5ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் இளைஞர் கைதால் பயனடைந்தோர் யார்?

கொழும்பில் இளைஞர்கள் கைது செய்யும் படலம் ஆரம்பித்ததால் பாதிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

1. ஹொட்டல் நடத்துபவர்கள்,
2. உணவுக் கடைக்காரர்,
3. மினிபஸ் உரிமையாளர்கள்,
4 ஏஜென்சிக் காரர்கள்.

இதனுல் நன்மை அடைந்தவர்கள்

பொலிஸ்காரர்கள் — புரிகிறதா?...

# சுவையான செய்திகள்

## அந்த வேதனை இனி இல்லை

இனி உடலினுள் ஊசி குத்தி மருந்தைச் செலுத்த வேண்டியதில்லை. புதிய முறை ஒன்றின்படி மருந்துப் பொருள் அடங்கிய சிறிய பட்டை (patch), நோயாளியின் உடலில் வைக்கப்படுகிறது. குறைந்த அழுத்தமுள்ள மின்சாரம் அதன் வழியாகச் செலுத்தப்படும். உடனே பட்டையிலுள்ள மருந்துப் பொருள் அனைத்தும் உடலுக்குள் இறங்கி, சில நிமிடங்களிலேயே ரத்தத்தில் கலந்துவிடும். இந்தப் புதிய முறைக்கு அயன்ரோபோரெஸிஸ் [Iontophoresis] என்று பெயர்.

## இப்படியொரு இளவரசனா ?

மணமகன் மணமகளுக்கு மோதிரம் பரிசளிக்கும் வழக்கம் முதன் முதலாக எப்போது தோன்றியது? வரலாற்றுக் குறிப்புகளின் படி, 1477-ம் ஆண்டில்தான் ஆரம்பமாகியது எனத் தெரிகிறது. ஆஸ்திரிய நாட்டு இளவரசன் முதலாவது மாக்ஸ்மிலியன், மேரி என்ற இளவரசியை மணந்தபோது, அன்பளிப்பாக ஒரு வைர மோதிரம் அளித்தார். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், அவர் அதை அவளுக்கு அணிவிக்கவில்லையாம். திருமணத்துக்கு முன்பே அனுப்பி வைத்தாராம். காரணம்? திருமண நாள்வரை அவர்கள் ஒரு தடவை கூடச் சந்தித்ததில்லை. கடிதங்கள் மூலமே காதலை வளர்த்துக்கொண்டு கரம்பிடித்த ஜோடி அது;

## அட! இருவரும் ஒருமனிதரா

ஹம்ப்ரி கைநாஸ்டன் என்ற ஆங்கிலேயர் இஸாபெல் என்ற பெண்ணை மணந்துகொண்டு பத்துவருடகாலம் அவளுடன் வாழ்ந்தபிறகு விவாகரத்துச் செய்தார். பதினைந்து ஆண்டுகள் தனியாக வாழ்ந்த பிறகு மீண்டும் திருமண ஆசை எழுந்தது மரியன் என்ற பெண்ணை மணந்துகொண்டு அவளுடன் 13 வருடகாலம் வாழ்ந்தார். அவருடைய உயிர்பிரியும் தருணத்தில் தான்ஓர் உண்மைதெரியவந்தது தான் மணந்துகொண்டு இல்லறம்நடத்திய இருபெண்களுமே ஒருவர்தான் என்பதே அந்த அதிசய உண்மையாகும்.

## கொழும்பில் தமிழ்த்தின விழா யாழ்-மாணவரும் பங்குபற்றுவர்

(வண்ணார்பண்ணை)

கல்வி இராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவும் இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவும் இணைந்து மே மாதம் எட்டாம் திகதி தமிழ்த்தின விழாவைக் கொழும்பில் நடத்தவுள்ளன.

இத் தமிழ்த் தினவிழாவையொட்டிப் பாடசாலை மாணவர்களிடையே பாடசாலைக் கொத்தணி, கோட்ட, மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியில் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பான விபரங்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் இப்போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

## யாழ் கொழும்பு ரயில் பயணிகள் நின்றபடிபயணம்செய்யும் அவலம்

யாழ். கொழும்பு புகையிரத சேவை ஒரு தடவை இடம் பெறுவதால் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தினமும் மூவாயிரத்திற்கு மேல் பயணிகள் இந்தரயிலில் பயணம் செய்கின்றார்கள். ஆனால் இவர்களில் 1600 பேருக்கு மட்டுமே ஆசனம் கிடைக்கின்றது. மிகுதிப்பயணிகள் நின்றபடியே பயணம் செய்து வருகின்றார்கள். அத்துடன் ரயிலில் பொருத்தக்கூடிய கூடுதலான பெட்டிகளே தற்போது பொருத்தப்பட்டுள்ளன.

இந்த நெருக்கடிகள் பற்றி ரயில்வேத் திணைக்களத்திற்குப் பல முறை அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென ரயில்வே திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் முரசொலிக்கு தெரிவித்தார்.

## வவுனியா கோட்டக்கல்வி அலுவலகம் திறக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தி; ஒழுங்காக இயங்கியதேயில்லை

(வவுனியா)

வவுனியா கோட்டக் கல்வி அதிகாரி அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் இன்னமும் இந்த அலுவலகம் செயல்பட்டதாகத் தெரியவில்லை எனப் பாடசாலை அதிபர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நிர்வாகம் பரவலாக்கப்படாததினாலேயே இக்கோட்டக்கல்வி அதிகாரி அலுவலகம் இயங்க முடியாதுஇருப்பதாகக் கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஊக்குவிப்புக்கடன்

மாங்குளம் மக்கள் வங்கி படித்த இளைஞர்கள் யுவதிகளுக்குச் சுயதொழிலை ஊக்குவிக்குமுகமாகப் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாதஊக்குவிப்புக் கடன்வழங்க முன்வந்துள்ளது.

## மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு வைத்தியசாலைப் புனரமைப்பு வேலைகளுக்காக அவசரப் புனர்நிர்மானத் திட்டத்தின் கீழ் 17 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது. ஏற்கனவே கடந்த வருடம் மட்டக்களப்பு வைத்தியசாலைப் புனரமைப்புகாக 3 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு 11. 4 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதி ஒன்றும், மாவட்ட மருந்துக் களஞ்சியத்தை அமைப்பதற்கு 1: 4 மில்லியன் ரூபாவும், மருத்துவ அதிகாரிகளுக்கான விடுதிகளை அமைப்பதற்கு 2. 6மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

## மீன்பிடி பயிற்சிகல்லூரி திருத்தப்படும்

மட்டக்களப்பு மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியைப் புனரமைப்பதற்காக 4. 44 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிட புனரமைப்பிற்காக 3. 9 மில்லியன் ரூபாவும், எஞ்சிய தொகை மீன்பிடி பயிற்சிக் கல்லூரி இணைப்பு வீதியைப் புனரமைப்பதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

## மாவட்டப் போட்டி

(வண்ணார்பண்ணை)

யாழ்-கோட்டக் கல்விப் பிரிவுப் பாடசாலைகளுக்கிடையேன உடற்பயிற்சிப் போட்டிகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதிகாலை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

கொத்தணிமட்டத்தில் ஏற்கவே நடைபெற்ற போட்டிகளால் முதலிடம்பெற்ற குழுக்களும் தேசிய தனியார் பாடசாலைக்குழுக்களும் கோட்டத்திலான இப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.

## அடிக்கல் நாட்டப்பட்டது

(காவலூர்)

வேலணை சரஸ்வதி வித்தியாசாலைக்கு எட்டு இலட்சம் ரூபா செலவில் புதியமாடிக் கட்டிடமொன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் வித்தியாலய அதியர் திரு. பொ. நடராசா தலைமையில் நடைபெற்றது இந்த வைபவத்தில் மங்கள விளக்கை கல்விஅதிகாரி ஜனாப் ம். ஏ. ஆர் ஏ ரகீம், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் டாக்டர் க. ஜெயச்சந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணை கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் புதிய மாடிக்கான அடிக்கல்லை நாட்டினர்.

## மயானம் திருத்தப்படுமா?

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தைத் திருத்தி புனரமைத்துத் தருமாறு வராத்துப்பளை சனசமூக நிலையம் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாவைக் கேட்டுள்ளது.

புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தின் பாவனை தற்போது மிக அதிகரித்துள்ளது. இதனால் இம்மயானத்தில் குறை நிலையில் உள்ள தங்குமடத்தை பூர்த்தியாக்குவதுடன் மயானவீதியையும் திருத்திப்புனரமைக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் சட்டவிரோத கட்டிடங்கள் அகற்றப்படும்

(வவுனியா)

வவுனியா நகரில் அத்துமீறிக் கட்டப்பட்ட கட்டிடங்கள் அகற்றப்படவுள்ளன.

வவுனியா நகரசபை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதேவேளை சபையின் அனுமதியின்றி வவுனியா நகரத்தின் உள் கட்டப்பட்ட சில கடைகளின் சொந்தக் காரர்கள் தமதுகடைகளைப் பூட்டிவிட்டு திறப்புக்களை நகரசபை நிர்வாகத்திடம் கையளித்திருப்பதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொழும்பு-புத்தளம் ரயில்சேவை மன்னார்வரை நீடிக்க முயற்சி

கொழும்பிலிருந்து புத்தளம் செல்லும் ரயில் சேவையை மன்னார் வரை நீடிக்க அரசு ஆலோசித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்படி போக்குவரத்து அமைச்சர் விஜயபாலா மென்டிஸ் ரயில்வேப் பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மோட்டார் சைக்கிள் பயணம் மீண்டும் ஹெல்மட் அமுல்

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் மீண்டும் ஹெல்மட் அணிய வேண்டிய நிலையை ஏற்படுத்தப் பொலிஸ் திணைக்களம் ஆலோசிக்கிறது.

ஜே.வி.பி. இயக்கத்தினர் மோட்டார் சைக்கிள்களில் ஹெல்மட்டுடன் வந்து தாக்கிவிட்டுப் போன சம்பவங்களால் இது இடை நிறுத்தப்பட்டிருந்தது.

மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்து வருவதாலேயே இது மீண்டும் அமுல் செய்யப்படவுள்ளது.

## கட்டிடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

(காவலூர்)

நயினாதீவு மகா வித்தியாலயத்திற்கான மேல்மாடிக் கட்டிடம் அமைப்பதற்கு கல்வித் திணைக்களம் ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேபோல் வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலைக்கு இரண்டுலட்சம் ரூபாவும், நாரந்தனை ரோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு இரண்டு லட்சம் ரூபாவும் கல்வித்திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டு தற்போது இதற்கான கட்டிடவேலைகள் நடைபெற்று வருகின்றன.

# முரசொலிக்கு வந்த கடிதம்

## பூசினிக்காயும், புடலங்காயும் எந்த வகையில் சத்துணவு?

ஆசிரியர்
முரசொலி
ஐயா

சகல பாடசாலைகளிலும் வழங்கிவரும் மதிய போசனம் போதாமல் இருக்கிறது. அரசாங்கத்தால் 3 ரூபா ஒரு மாணவனின் மதிய போசனத்துக்கென ஒதுக்கப்படுகிறது. 3 ரூபாவிற்குப் பெறுமதியான உணவை ஏன் வழங்குவதில்லை? அது ஒருபுறம் இருக்க, சில பாடசாலைகளில் இரண்டு மெலிபன் பிஸ்கட் மட்டும் மதிய உணவாக வழங்கப்படுகிறது. சத்துணவு என்ற பேருக்கு உணவு அமையவில்லை. வெறும் பூசினிக்காயும், தக்காளிடபழமும், புடலங்காயும் சோறும் வழங்கப்படுகின்றன. இதுதானா சத்துணவு? இது குறித்து அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

நெல்லியடி; எஸ். சிவராசா

## யாழ் பொது நூலக நூல்கள் அதிகாரி, நண்பர் வீடுகளில்

ஆசிரியர்,
முரசொலி
ஐயா,

யாழ் மாநகர சபையின் பொது நூலகம் 6 இடங்களில் கிளை நூலகமாகச் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. நூலகத்தின் பொதுவான அலுவலகம் யாழ் இந்து விடுதியில் செயற்படுகின்றது. முன்னாள் யாழ் மாநகரசபை ஆணையாளர் அலுவலகமும் நல்லூர் க்கிளை நூலகமும் ஒரே கட்டடத்தில் இயங்க வேண்டும் என உத்தரவிட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்படவில்லை. இதற்கிடையில் நூலக நிர்வாகத்தில் உள்ள உத்தியோகஸ்தரிடையே மனஸ்தாபங்கள் உருவாகித் தாக்குதல்கள் நிகழுமளவுக்கு வளர்ந்துள்ளது. அத்துடன் புத்தகம் கட்டுவோர் அலுவலக நேரங்களில் சொந்த முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். சில உத்தியோகஸ்தர்கள் பெறுமதியான புஸ்தகங்களை வெளியே கொண்டு சென்று விற்று விடுகின்றனர். நூலகம் பெயரளவில்தான் உண்டு. பத்திரிகைகள் ஒன்றும் இல்லை. வெளிநாட்டுச் சஞ்சிகைகள் ஒன்றும் இல்லை. அப்படி வரும் வெளிநாட்டுச் சஞ்சிகைகளும் நூலகத்தின் உயர் உத்தியோகஸ்தர்கள் அவர்களின் நண்பர்கள் வாசித்துத் தேவையானவற்றை வெட்டி எடுத்த பின்புதான் மக்கள் வாசிப்பதற்கு வருகின்றது. இதைவிட ஊழல்கள், மோதல்கள் ஏராளம்.

எனவே நூலகம் தனது பணியை சிறப்புடன் செய்யச் சம்பந்தப்பட்டவர்கள் வழிவகுக்க வேண்டும்.

செட்டித்தெரு எஸ். காந்தரூபன்
யாழ்ப்பாணம்

# பயிற்சி ஆசிரியர் நியமனம்
# தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(சித்தன்கேணி)

கல்வி அமைச்சினால் அண்மையில் நடாத்தப்பெற்ற எழுத்துப் பரீட்சை நேர்முகப் பரீட்சைகளின் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களின் விபரம் பின்வருமாறு;-

**சங்கானை உ. அ. அ பிரிவு;-**

ஆரம்பக்கல்வி— (22) சு. கலாநிதி, வி. ஜெகதீஸ்வரி ப. லிங்கேஸ்வரி, இ. சுலோஜனு, சி. ரேகினி, சி. புஷ்பமலர், க. புஷ்பராணி, சு. செல்வராணி, சி. சிவனேஸ்வரி, க. மனோரஞ்சி, மு. தேவராணி, திருமதி இ. முத்துமலர், க. மனோகரி, மு. வசந்தி, ந தில்லைவதனு, தி. மனோகரி, செ வசுந்தரா, வ சரஸ்வதி, சி. சந்தானலட்சுமி, ஆ கலாவல்லி, மா. கலைவாணி, தா. சரோஜினிதேவி,

இந்துசமயம் 1: செ. செல்வராணி.

கிறிஸ்தவம் ரோ. க. 1: கு. யஸ்அனி ஏஞ்ஜெஸ்.

கிறிஸ்தவம்: ரோ. க. அல்லாத 1): பிறெஜினு தேவமலர்.

தமிழ் 2: ஜெ. சுதா க. லோகாஞ்சனு

விஞ்ஞானம் 2: இ. பிறேமச்சந்திரன், சி. சாந்தினி

ஆங்கிலம் 6: சு. சுமதி, சு. நகுலேஸ்வரி, 3. ச. செல்வரத்தினம், ந. தமிழரசி, க. ஜெயராதா, 6. கு சாந்தகுமாரி.

உடற்கல்வி 2: சு. குகரதி, சு, வதனி,

சமூகக்கல்வி 4: வே. சிவரூபராணி, அ சிவலோகநாதன், வி. விக்னேஸ்வரி, ந. விஜயதேவி.

சித்திரம் 3: கு. நகுலாம்பிகை, ந ஏரம்பமூர்த்தி, த: மதிவதனி,

சங்கீதம் 3: சி. அமிர்தவேணி, ச. சுபத்திராதேவி, கு. விஜிதா.

நடனம் 5: சி. றஞ்சிதமலர், தி. வசந்தா, ப. சாரதா, தி. செல்வமலர், ந. தனலட்சுமி,

விவசாயம்: 1) ஆ. குணதேவி.

மனையியல் 2: சி. நாகநந்தினி, ந. ஜெயரஞ்சனு.

வர்த்தகம் 1: த. பவானி,

மரவேலை 1: க. கிருஷ்ணமூர்த்தி.

நெசவு 1: அ. முகுந்தசுந்தரி.

**சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு:**

ஆரம்பக்கல்வி;(29):- தி. மேரி, திருமதி கே. விஜயலக்சுமி, ஆர். முகுந்தன், தி. கலாமதி, எஸ். சசிகலா, கே. சத்தியவதனு, மேரிஜிடினு வியோணி, ஈ, மரியாசுசில்லா, எஸ். குலசிங்கம், எஸ். தயாநாயகி, தி. தவராசா, திருமதி எம், அருந்ததி, எம். கமலலோஜினி, எஸ். குலமோகன் கே. குணவதி, மரியா இமகுலேட், எஸ். இராசேஸ்வரி, ஜே. கே. மாலினி, தி. சிவஞானம், எம். சகாயராணி, எஸ். இந்துமதி, எம். பத்மலோஜினி, ஏ. ஜேக்கப்மேரி, தி. இராஜகமலா, எஸ். மேரி புஷ்பராணி, ஏ ஜெயமலர், கே. விமலாதேவி, எம். நிர்மலாதேவி, ஏ. மீனலோஜினி.

இந்துசமயம்: (4):- எம். ரவிராஜா. எம். சுசீலாதேவி. எஸ். மீனலோஜினி, வி. பரமாதேவி.

கிறிஸ்தவம் (ரோ க) -(3) ஏ. எம் ஈ. ஆல்பிரேட், ஆர். ரீடாகுணரூபினி, பி. போல் ஜெயராணி.

தமிழ்– (5); ஆர். புஷ்பமலர், எஸ். தயாபரராணி, எஸ் சிவநிதி, வெனிஸ் சாந்தினி, எஸ். செபமாலையம்மா.

கணிதம் (2):- எஸ் மலர்விழி, எஸ். நடராசா.

விஞ்ஞானம் (2) :- தி. கண்ணம்பாள், கே. உதயநிலா.

ஆங்கிலம் (9) :- எஸ். வாசுகிதேவி, கே கிருபா, எஸ். விஜயலக்சுமி, என். ரவீந்திரன், ஆர். சந்திராதேவி, கே. புவனேஸ்வரி. திருமதி எம். ஆர். ஸ்ரீ சச்சிதானந்தன், பி. தயானந்தன், கே. மித்திராதேவி.

சமூகக்கல்வி (4):- திருமதி கே. சகுந்தலாதேவி, ஈ. நிர்மலாதேவி, என். கௌசலா, ஆர். ரேகினி.

சித்திரம் [6] :- எஸ். கிருஷ்ணகுமாரி, கே. சோமேஸ்வரி, திருமதி ஆர். ஆர். மதியலோஜி, ஆர். நந்தினிதேவி, கே. ரட்னேஸ்வரன், ரீ. புஷ்பராணி.

சங்கீதம் 7: சகோ. இளிரிஸ்டார், எஸ். அன்னலட்சுமி, எம். ஜே. மேரிஜக்குலின் விஜயா, கே, சரளா, எம். மஞ்சுளாதேவி, கே: சரோஜாதேவி, தி ரேகினிதேவி.

நடனம் 9: எஸ். யோகநந்தினி, வின்டா இலங்கைகரசி, கே: பத்மலோஜினி, என். இந்திரா, ரதிக்கா, கே: நர்மதா, கே. ஏ. நிர்மலா, ஈ. நிர்மலா, கே சுகஜினி,

வாழ்க்கைத்திறன் 2: ஏ சாந்தகுமாரி, பி நளினி.

விவசாபம் 2 : ஏ ஜீவலோஜினி, கே. சிவானந்தன்.

மனையியல் 2: என். பவானி, கே. மல்லிகாதேவி.

வர்த்தகம் :2 ஆர் நித்தியகுமார், வி. புனிதவதி.

பரவேலை 1: அன்டூர்ஸ் பென்சமின்.

சமஸ்கிருதம்: ஆர். விமலலோஜினி.

சுகாதாரம் 4: என். சந்திரகுமாரி, என். விஜயசித்திரா, கே. சாந்தினி, கே. சித்ரா.

(மிகுதி நாளை)

## இன்று நாள் எப்படி?

மேடம்: வாக்குப்பலிதம், உயபதவி, எண்ணியது நடக்கும்' இளையசகோதர வழியுதவி வணிகர்கள் இலாபம், தூரத்துச்செய்தியால் நன்மை.

இடபம்: கல்வியால் தொழில், காதலர் ஒன்றுசேருவார்கள், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், இளையசகோதரவழியுதவி.

மிதுனம்: எண்ணியது நடக்கும், வாக்குப்பலிதம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம், தெய்வஆசி.

கடகம்: தேடியவர் வருகை, பிதாவழி சொத்து, புதுமனை சேருதல், கடற்தொழில் இயந்திரத்தொழில் மூலம் இலாபம்.

சிங்கம்: உயர்பதவிமூலம் உபத்திரவம், பணமுடை சகோதரவழி கவலை, புதுத்தொழில் பெரியோராசி.

கன்னி: விவாகநிச்சயம், மனநின்மதி, தொழிற்பேறு, பெண்களாலுதவி, பெரியோராசி, வாகனசுகம்.

துலாம்: சத்துருபயம், இராஜமரியாதை, உடல்ரோகம், மாமன்வழியுதவி, களஸ்திரசுகம், பெண்களால் நன்மை.

விருட்சிகம்: பெரியோர்வருகை கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தகாதலர் ஒன்றுசேருதல், வணிகர்கள் இலாபம்.

தனுசு: சுகஜீவியம், பணவரவு, வாக்குப்பலிதம், உத்தியோக உயர்வு, சகோதரவழி நன்மை, புதுத்தொழில்.

மகரம்: வாகனசுகம், புத்திரவழி மகிழ்ச்சி, புண்ணியவழிபாடு, பெண்களால்சுகம், பெரியோராசி.

கும்பம்: பணவரவு, வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், வாக்குப்பலிதம், புதுத்தொழில்.

மீனம்: பெண்களால்கவலை, விவாகநிச்சயம், பணச்செலவு, தொழில்மாற்றம், தேடியவர் வருகை, மாமன்வழியுதவி.

★ யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## கணித ஆலோசகர் கருத்தரங்கு

பாட விதானத் துறையின் சார்பில் கடந்த மாதம் திருமலையில் நடைபெற்ற ஆண்டு 6 —11 வகுப்புகட்கான கணித ஆலோசகர்களின் கருத்தரங்கில் கலந்து கொள்ளாத ஆசிரியர்கட்கான விசேட சேவைக்காலப் பயிற்சி நெறி இம் மாதம் 27ஆம்திகதி முதல் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## ஆசிரியரின்மையால் கல்வி பாதிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் மாணவர்களின் கல்வியில் பெரும்பாதிப்புஏற்பட்டுள்ளது

கடந்த பல வருடங்களுக்கு மேலாக அங்கு நிலவிவரும் ஆசிரியர் பற்றுக்குறையாலே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

உடற்கல்வி, தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக் கல்வி, போன்ற மிகமுக்கியமான பாடங்களைப்புகட்டுவதற்கு ஆசிரியர்கள் இல்லாமையினால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

## ஹொலண்ட் உலகக்கோப்பை ஹொக்கி சம்பியன்

(லாகூர்)

ஏழாவது உலகக் கோப்பைக்கான ஹொக்கிப் போட்டியில் ஹொலண்ட் சம்பியனுகியுள்ளது. நேற்று லாகூரில் நடைபெற்ற போட்டியில் மூன்று முறை உலக சம்பியனுக வந்த பாகிஸ்தானை ஹொலண்ட் 3-1 என்ற ரீதியில் தோற்கடித்தது.

## சண்டிலிப்பாயில் மெய்வல்லுநர் போட்டிகள்

(சங்கானை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடாத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி மார்ச் மாதம் 25-ம் திகதி நடாத்தப்படவுள்ளது.

வலைப்பந்தாட்டப் போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி, உதைபந்தாட்டப்போட்டி, எல்லேபோட்டி ஆகிய போட்டிகளை இதற்கு முன்னேடியாக மார்ச் மாத முற் பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### யாழ்நகரில்

தேசியக் கலை இலக்கியப் பேரவை நடாத்தும் பேராசிரியர் க. கைலாசபதி நினைவு ஆய்வரங்கு – 5 இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ். மணியம் கட்டிடத்தில் இ. முருகையன் தலைமையில் நடைபெறும். திருமதி அம்மன்கிளி முருகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துவார்.

### நல்லை ஆதீனத்தில்

உலர்வலய அபிவிருத்தி நிறுவனத்தின் கலாமன்றம் வழங்கும் மாதாந்தக்கர்நாடக இசை நிகழ்ச்சி இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

### நயினையில்

இன்று ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு ஸ்ரீ. நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த வழிபடுநர் சபைக்கூட்டம் ஆலயக் கல்யாண மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் சி. நா. மதியாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### வண்ணையில்

'பெண்களும் இன்றைய சூழலில் தலைமையின் தேவையும்' என்னும் தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் வண்ணார்பண்ணையில் இன்று காலை கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளது. காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் திருமதி சரோஜா சிவச்சந்திரன், திருமதி ந. ஜெகதீசன் ,எஸ். அனுஷ்யந்தன், கலாநிதி வி. இராமகிருஷ்ணன், எ. சதிகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளுவர்.

## பெயர் மாற்றம்

[வண்ணார்பண்ணை]

குருநகர் கொத்தணியின் பெயர் யாழ்–நகர் தெற்குக் கொத்தணியென மாற்றப்பட்டுள்ளது.

இக்கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## பரிசோதகர்கள் நியமனம்

வடக்குக்,கிழக்குப் பகுதிகளில் 75 கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான நியமனங்கள் மார்ச் மாதம் 1-ந் திகதி முதல் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.


நாடுங்கள்

**ராகுலசூரியன்ஸ்**

இறக்குமதி செய்யப்பட்ட சேட்டிங் சூட்டிங் சாறிகள் ஜவுளி வகைகள்
ரெடிமேட் ஆடைகள் சாறிஸ் வகைகள் பிளவுஸ் பீஸ் வகைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
இன்றே விரையுங்கள்

**ராகுலசூரியன்ஸ்**

பிரதான வீதி (சிவன் கோவிலடி) பருத்தித்துறை

02256



**வேண்டுகோள்**

1989 07 26 -ம் திகதி எனது வீடு தீக்கிரையாக்கப்பட்ட போது வழக்கு ஆவணங்களும் உறுதிகளும் பொருள்களும் எரிந்துவிட்டன. 1987 12 31 ம் திகதிக்கும் 1989 07 26-ம் திகதிக்குமிடையே என் முன்னிலையில் உறுதிகள் நிறைவேற்றிய கட்சிக்காரர்கள் உடனடியாக என்னைச் சந்திக்கும் படியும் தற்போது காணிப் பதிவகம் வேலைசெய்கின்றபடியால் என்னிடமிருந்துஉறுதிகளின் மூலப்பிரதிகளைப் பெற்றுச் சென்றவர்கள் அவற்றை பதிவுக்காக என்னிடம் தரும்படி அல்லது காணிப்பதிவகத்தில் சமர்ப்பிக்கும் படியும் கேட்டுக்கொள்கின்றேன்:

நன்றி

மு. க, முத்துக்குமார்
சட்டத்தரணி
மருதடி. பருத்தித்துறை

022581

# மன்னார் மாவட்டத்தில் பனந்தும்பு உற்பத்தி

(மன்னார்)

பனந்தும்பிற்கு அதிக கிராக்கி ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை மன்னார் மாவட்டத்தில் பனந்தும்பு உற்பத்தியை அதிகரிக்க விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. பனை மூலவளம் கொண்ட மாவட்டங்களில் மன்னாரும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இம் மாவட்டத்தில் உள்ள கீழியன் குடியிருப்பு, துன்னுக்குடியிருப்பு, சிறுத்தோப்பு, உவரி, தலைமன்னார், கரிசல் ஆகிய இடங்களில் பனந்தும்பு உற்பத்திப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பு பனை அபிவிருத்திச்சபையால் உடனுக்குடன் கொள்வனவு செய்யப்படுகிறது.

இப்பனந்தும்பு உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மன்னார் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. சி. இராசநாயகம் மேற்கொண்டு வருகிறார். தலைமன்னாரில் உள்ள பனந்தும்பு உற்பத்திப் பயிற்சி நிலையத்தை இயந்திரமயமாக்கி நவீனப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகிறன.

## பருத்தித்துறை பொலிஸ் நிலையம் அஞ்சல் அலுவலகத்தில் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் நிலையம் பருத்தித்துறை அஞ்சல் அலுவலகக் கட்டிடத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது.

முன்னர் இவ் அஞ்சல் அலுவலக கட்டிடத்தில் இந்திய அமைதிப்படையினர்முகாமிட்டிருந்தனர்

கடந்த வாரம் இந்திய அமைதிப்படையினர் வெளியேறியதைத் தொடர்ந்தே பருத்தித்துறை பொலிஸ் நிலையம் அஞ்சல் அலுவலக கட்டடத்தில் செயற்படத்தொடங்கியுள்ளது.

## மாகாண சபையைக் கலைக்க ஈ.பி.ஆர்.எல்.எப் மறுப்பு

வட-கிழக்கு மாகாண சபையைக் கலைக்க ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது இந்த முடிவை நேற்று தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்த போது ஈ. பி. ஆர். எல், எப். குழு தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்தி தெரிவிக்கின்றன

மாகாண சபையைக் கலைத்தால் மட்டுமே தாம் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளலாம் என்று விடுதலைப்புலிகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

மாகாண சபையைக் கலைக்கும் 'அதிகாரம்' உரிமை மாகாணக்குழுவிற்கே உண்டு என்றும் அந்த அதிகாரம் அரசிற்கு இல்லை என்றும் அரசியல் சாசன அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

## மின்கட்டணம் ஏப்ரல் முதல் அதிகரிப்பு

எதிர்வரும் ,ஏப்ரல் 1ஆம் திகதி தொடக்கம் மின்சாரக் கட்டணங்களின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் 50 அலகுகளுக்கு குறைவாக மின்சாரம் பாவிப்போருக்கு விசேட சலுகை வழங்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனையின் பேரிலே மேற்படி மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் முதல் 1—50 அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்துபவர்களிடம் இருந்து அலகு ஒன்றிற்கு 55 சதம் மட்டுமே அறவிடப்படவுள்ளது,

51—450 அலகுகள் வரை பயன்படுத்துவோர் அலகு ஒன்றிற்கு 2-70 சதம் வீதம் கட்டணம் செலுத்த வேண்டும். 450 அலகுகளுக்கு மேல் உபயோகிப்பவர்கள் அலகு ஒன்றிற்கு 4 ரூபா செலுத்த வேண்டும்.

## படையினருக்குக் காப்புறுதி

ஆயுதப்படையினர், பொலிஸார் ஆகியோரின் வீடுகள் காப்புறுதி செய்யப்படவுள்ளது. இதற்கான திட்டம் ஒன்றைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது

சுமார் பத்தாயிரம் காப்புறுதிப் பொலிஸிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தீவிரவாதிகளினால் படையினர் குடும்பங்கள் தாக்கப்படுவதனாலேயே இது அமுல் செய்யப்படுகிறது,

### சங்கானைப் பிரதேசத்தில்

## 5 இலட்சம் ரூபாமின்பாக்கி; இணைப்பைத் துண்டிக்க முடிவு

(சங்கானை)

வலிமேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகப் பிரதேசத்தில் மின்சாரப் பாவனையாளர்கள் அலுவலகத்திற்கு மின்சார நிலுவைப் பணமாகச் சுமார் ஐந்து இலட்சம் ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளது.

இந்த நிலுவைப் பணத்தைத் தாமதமின்றிச் செலுத்துமாறு மின்சாரப் பாவனையாளர்களுக்குச் சங்கானைப் பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேவேளை நீண்டகாலமாகத் தங்கள் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமலிருக்கும் மின்பாவனையாளர்களுக்கு மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்கான "சிவப்பு நோட்டீஸ்" அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

---

### ஜனாதிபதி...

சிங்களவர்களின் பகுதிகளிலேயே சட்டம் ஒழுங்கு தவறிவிட்டது. இதுவரை அங்கு பல பொதுமக்கள் கொல்லப்பட்டுவிட்டனர் எனவும் வரதராஜப்பெருமாள் மேலும் தெரிவித்தார்.

---

### வலவை...

ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நெடுமாறன் பேசுகையில்:

"எழுபது கோடி மக்களைக் கொண்ட நாலாவது வல்லரசு நாடான இந்தியாவின் ஒன்றரைலட்சம் பேர் கொண்ட இராணுவத்தினரை ஓடவைத்த தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் வீரம் வியட்நாமியரை விட மேலானது. அவர்களுக்காவது இதர நாடுகள் உதவி செய்தன,

ஆனால் தம்பி பிரபாகரனின் தலைமையிலான தமிழ் மக்களுக்கோ எந்த நாட்டு உதவிகளும் இல்லாத போது அவரினி ஒன்றுபட்ட கட்டுக்கோப்பான போராட்டமே மாபெரும் நடுகளில் ஒன்றை வீழ்த்தி வெற்றிகாண வைத்தது" என்றார்.

---

### வடகிழக்கு..

இந்த சட்ட மூலத்தை வடகிழக்கு மாகாண சபை நிறைவேற்றி ஆளுநரின் அங்கீகாரத்துக்கு அனுப்பிய போது அவர் அதற்கு அங்கீகாரம் வழங்க மறுத்துவிட்டார்.

---

### பருத்தித்துறையில்...

இந்திய அமைதிப்படையினர் வெளியேறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இத்தாக்குதல் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

---

## பருத்தித்துறையில் இலங்கை பொலிஸ் உயர் அதிகாரிகள்

(பருத்தித்துறை)

ஸ்ரீ லங்கா இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று பருத்தித்துறைக்கு வந்து தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்து சென்றது.

## மக்கள் வங்கி கடன் சட்டம்

சேதமுற்ற வீடுகள், வியாபார நிலையங்கள் ஆகியவற்றை புனரமைக்க கடன் வழங்கும் திட்டம் ஒன்றை வடபகுதி மக்கள் வங்கி ஆரம்பித்துள்ளது. இதன் கீழ் முதற்தடவையாக நூற்றிமுப்பது பேருக்கு மக்கள் வங்கி இந்த கடனுதவியை வழங்கவுள்ளது

## மட்டக்களப்பில் நேற்று புலிகளின் அரசியல் குழு கூட்டம்

நேற்று மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் அரசியற் குழுக் கூட்டம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இக் கூட்டத்தில் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயாவும் கலந்து கொண்டார்.

புலிகளின் மக்கள் முன்னணியினர் சகல மாவட்டப் பொறுப்பாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்கனவே மட்டக்களப்புக்குச் சென்றிருந்தனர்,

இக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கில் தற்போதைய நிலை குறித்தும், தேர்தல் நிலைகுறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

## கருணாநிதி பேச்சுக்களைத் தொடர இந்தியப் பிரதமர் வேண்டுகோள்

தமிழ் குழுக்களுடன் நடைபெற்றுவரும் பேச்சுக்களை தொடர்ந்து நடத்துமாறு இந்தியப் பிரதமர் வி. பி. சிங் தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. கருணாநிதியைக் கேட்டுள்ளார்.

தமிழ்க் குழுக்களுடன் நடைபெறும் பேச்சுக்களில் இன்னமும் சாதகமான நிலை உருவாகாததால் மனம் தளராது தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்துமாறு இந்தியப் பிரதமர் கருணாநிதியைக் கேட்டுள்ளார்.

## ஏப்ரலில் சார்க் மாநாடு இலங்கையில் நடத்த ஆயத்தம்

சார்க் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கையில் நடைபெற சகல ஆயத்த நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன. மாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்:

எனினும் மாநாடு இலங்கையில் நடாத்துவது குறித்து சார்க் கூட்டமைப்பின் தற்போதைய தலைமை நாடான பாகிஸ்தானிடம் இருந்து எந்தவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

## மொழிபெயர்ப்பாளர்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

அரசகரும மொழித் திணைக்களத்தில் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளருக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## ஜெயலலிதா கார் விபத்தில் காயத்துடன் தப்பினார்

(சென்னை)

அ. தி. மு. க. பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதா பயணம் செய்த கார் நேற்று காலை மீனம்பாக்கத்திற்கு அருகில் விபத்துக்குள்ளாகியது.

விபத்துக்குள்ளான இந்த காரில் பயணம் செய்த ஜெயலலிதா, அவரின் உதவியாளர் கார்சாரதி ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இவர்களுக்கு எவ்வித ஆபததும் இல்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தவிபத்து தொடர்பாக லொறி சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## வைத்திய அதிகாரிகளுக்கு வடக்கில் தட்டுப்பாடு

அக்கராயன், பூநகரி, கிளிநொச்சி, பளை; சாவகச்சேரி, அச்சுவேலி, சங்கானை, பருத்தித்துறை, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள அரசாங்க வைத்திய சாலைகளில் வைத்திய அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறைக்கு ஒன்பது வைத்திய அதிகாரிகளும் சாவகச்சேரிக்கு மூன்று வைத்திய அதிகாரிகளும் தேவையாக உள்ளது இவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை வடபிராந்திய சுகாதார சேவைத் திணைகளம் எடுத்துள்ளது.

## புதுவருடத்தை முன்னிட்டு இரு பருப்பு வகை இறக்குமதி

(கொழும்பு)

நாட்டில்பருப்புக்குத் தட்டுப்பாடு ஏற்படாது இருக்கக் கூட்டுறவு மொத்த விற்பனைநிலையம் இருவகையான பருப்பு வகைகளை இறக்குமதி செய்யவுள்ளது.

துருக்கி, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலிருந்து இவை இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அவுஸ்திரேலியாப் பருப்பு (அவரைஇனம்) கிலோ மூப்பத்திரண்டு ரூபாவாகவும் துருக்கிப் பருப்பு கிலோமுப்பத்தைந்து ரூபாவாகவும் விற்கப்படும். அடுத்த சிங்கள, தமிழ் புதுவருடத்திற்கு முன்பாக இவை தருவிக்கப்படும்.

## நூல்களுக்குக் கொடுப்பனவு

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தினால் எழுத்தாளர்களிடமிருந்து பெறப்பட்ட நூல்களுக்கான கொடுப்பனவுகள் வருகிற மார்ச் மாதம் வழங்கப்படவுள்ளதாக உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா அறிவித்துள்ளார்.

ஒரு ஆக்கத்தின் நூறுபிரதிகள் என்ற அடிப்படையில் சுமார் இருநூறு ஆக்கங்கள் மேற்படி திணைக்களத்தால் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 25-02-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது